<u>சுருக்கம்</u>

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – சிவகங்கை மாவட்டம் – பழுதடைந்த கிருங்காக்கோட்டை, சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிக் கட்டிடம் மற்றும் எஸ்.செவல்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக் கட்டிடங்களை இடிக்க அனுமதி அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி4) துறை

அரசாணை (1டி) எண்.591 நாள்: 09.10.2009

<u>படிக்கப்பட்டவை.</u>

1. மாவட்ட ஆட்சித் தலைவர், சிவகங்கை கடித எண். அ 6/ 1852 / 2009, நாள் 28.03.2009.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கடித எண். 1852 / 2009 / டியு 3, நாள் 25.05.2009.

-----

<u>ஆணை:</u>

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மேலே 2–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் (1) 1270.54 சதுர அடி பரப்பளவு உடைய பழுதடைந்துள்ள கிருங்காங்கோட்டையைச் சேர்ந்த சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிக் கட்டிடம் மற்றும் (2) 1327 சதுர அடி பரப்பளவு உடைய எஸ்.செவல்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக் கட்டிடம் ஆகியவற்றை இடிக்க சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அனுமதி கோரியுள்ளதாக தெரிவித்துள்ளார். இவ்விரண்டு பள்ளிக் கட்டிடங்களும் 1982–ல் கட்டப்பட்டவை. இவை இரண்டும், மேற்பார்வைப் பொறியாளரால் (ஊரக வளர்ச்சி) பார்வையிடப்பட்டு, அவரிடமிருந்து கீழ்க்கண்ட அறிக்கை பெறப்பட்டுள்ளது:-

(1) முன்புற மற்றும் பக்கவாட்டு சூரியஒளித் தடுப்புகள் பழுதடைந்தும், உள் கட்டமைப்புகள் அரிக்கப்பட்டும், வெளியில் தெரிவதாகவும் உள்ளது.

(2) கட்டிடச் சுவர்கள் அனைத்திலும் அதிக அளவிலான விரிசல்கள் உள்ளன.

(3) கட்டிடத்தின் கூரையின் சிமெண்ட் பூச்சு, மேற்புறம் தேங்கிய தண்ணீரால் ஆங்காங்கு பெயர்ந்து விழுந்துள்ளது.

(4) இவ்விரு பள்ளிக் கட்டிடங்களும் தலா 1270.54 சதுர அடி மற்றும் 1327 சதுர அடி தரைப் பரப்புகளைக் கொண்டவையாக உள்ளது.

// த.பி.பா.//

2. அரசாணை (நிலை) எண்.56, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 03.04.2008–ல் இடிக்கப்பட வேண்டிய கட்டிடம் குறித்து அரசால் கீழ்கண்ட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன:-

(அ) கட்டிடத்தின் வயது 40 ஆண்டுகளுக்கு மிகையாக இருந்தால் கட்டிடத்தின் பரப்பினை ஏதும் கருத்தில் கொள்ளாமலும், கட்டிடத்தின் வயது 30 ஆண்டுகளுக்கு அதிகமாகவும் கட்டிடத்தின் பரப்பளவு 450 சதுர அடிக்கும் குறைவாகவும் இருக்கும் பட்சத்தில் அத்தகைய கட்டிடத்தை இடிப்பதற்கு உரிய நெறிமுறைகள் பின்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரே உரிய ஆணை பிறப்பிக்லாம்.

(ஆ) கட்டிடத்தின் வயது 30–லிருந்து 40–க்குள்ளும் கட்டிடங்களின் பரப்பளவு 450 சதுர அடிக்கு மேலான கட்டிடங்களை இடிப்பதற்கு உரிய நெறிமுறைகள் பின்பற்றி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் ஆணை பிறப்பிக்கலாம்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் இந்நேர்வில் இடம்பெற்றுள்ள இரு கட்டிடங்களின் வயதும் 30 ஆண்டுகளுக்கு குறைவாகவே உள்ளதாக (அதாவது 27 ஆண்டுகள்) தெரிவித்துள்ளார். எனவே அரசாணையில் 30 ஆண்டுகளுக்கும் குறைந்த வயதுள்ள கட்டிடங்கள் இடிப்பது குறித்து குறிப்பாக அறிவுறுத்தல்கள் ஏதும் தெரிவிக்கப்படவில்லையெனினும், கட்டிடத்தின் கட்டமைப்பு உறுதி நிலையையே முதலில் கருத்தில் கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. எனவே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மேற்குறிப்பிட்ட இரு பள்ளிக் கட்டிடங்களின் வயது 27 ஆண்டுகளே ஆகியுள்ள போதிலும், கட்டமைப்பின் ஸ்திரத்தன்மையற்ற நிலையை கருத்தில் கொண்டு இடிப்பதற்கு சிறப்பினமாகக் கருதி கட்டிடங்களை இடிக்க அனுமதி அளிக்க கோரியுள்ளார். மேலும் மேற்குறிப்பிடப்பட்ட இரு பள்ளிக் கட்டிடங்களின் தற்போதைய நிலையை பல்வேறு கோணங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்களையும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அனுப்பியுள்ளார்.

// த.பி.பா.//

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவை அரசு கவனமாகப் பரிசீலனை செய்து கிருங்காக்கோட்டையில் உள்ள சிங்கம்புணரி பஞ்சாயத்து யூனியன் துவக்கப் பள்ளியின் 1270.54 சதுர அடி பரப்பளவு கட்டிடம் மற்றும் எஸ்.செவல்பட்டி பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப் பள்ளியின் 1327 சதுர அடி பரப்பளவு கட்டிடம் ஆகியவற்றை அவற்றின் ஸ்திரத்தன்மையற்ற கட்டமைப்பினைக் கருத்தில் கொண்டு சிறப்பினமாக கருதி அக்கட்டிடங்களை இடிக்க அனுமதி அளிக்க முடிவுசெய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக்வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர்,
சென்னை – 15.
மாவட்ட ஆட்சித் தலைவர்,
சிவகங்கை மாவட்டம்.
சிவகங்கை.

நகல்
முதுநிலை நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம்,
சென்னை – 9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்